Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 பெப்ரவரி 10-02-1991 ஞாயிற்றுக்கிழமை ஓசை: 357

## ராஜ மனோகரிக்கு கல்வி அதிகாரி புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள பள்ளிச் சிறார்களுக்கான இலவசப் பாட நூல்களை ஒதுக்கீடு செய்யக் கல்வி, கல்விச்சேவைகளுக்கான ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பெற்றோரும், கல்வித் திணைக்களமும் நன்றி தெரிவிக்கக் கடப்பாடுடையவர்கள் என்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் (4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா விரக்தி

# குறுக்கிடும் எண்ணமில்லை; மக்கள் விரும்பின் வேறு விடயம்

## இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பேட்டி

(டில்லி)

இலங்கை மக்கள் விரும்பினால் அன்றி அந்த நாட்டு விவகாரங்களில் குறுக்கிடும் எண்ணம் இந்தியாவிற்கில்லை என்று கூறிய இந்தியப் பிரதமர் சந்திரசேகர் இலங்கை மக்கள் விரும்பினால் இலங்கை விவகாரங்களில் தலையிடுவது வேறு விஷயம் என்றும் சிறிலங்கா பத்திரிகையாளர் இருவருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய உடன்படிக்கை தொடர்பான கடமைப் பொறுப்புகளை இந்தியா நிறைவேற்றி விட்டது. இலங்கை மக்கள் விரும்பினால் இலங்கை விவகாரங்களில் தலையிடுவது வேறு விஷயம் என்று பிரதமர் இலங்கைப் பத்திரிகையாளர் இருவருக்கு வழங்கிய பேட்டி ஒன்றின் போது தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பொதுவான அணுகுமுறை எதுவும் இல்லை என்றும் விடுதலைப் புலிகளை எப்படிச் சமாளிப்பது என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கவேண்டிய காரியம் என்றும் அவர் தெரிவித்தார்.

அயல்நாடு என்ற வகையில் இலங்கை நிலைவரம் குறித்து இந்தியாவுக்குக் கவலை இருக்கிறது. இந்தியாவுக்கு இலங்கை அகதிகள் வருவதால் இங்கு பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவது கவலையை அளிக்கின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அகோர விமானக்குண்டுவீச்சில் கந்தர்மடத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் மணற்றறைப் பகுதியில் நேற்றுக் காலைமேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் குடும்பப்பெண் ஒருவர் பலியானார். இருவர் காயமடைந்தனர். ஏழுக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக் காலை ஒன்பதுமணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட அகோர தாக்குதலில் கந்தர்மடம் மணற்றறை வீதியைச் சேர்ந்த நல்லூர்ப்பிள்ளைகளின் தாயான திருமதி செல்வலட்சுமி செல்வரட்ணம் (36) என்பவர் தலை சிதறி மரணமானார்.

இவர்கள் நாவற்குழியிலிருந்து இடம்பெயர்ந்து இங்கு தங்கியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குண்டுவீச்சுச் சம்பவத்தில் புஷ்பராஜன் வசந்தி (35), இராசவேலு பிரபா (70) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள ஏழுக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளது. (85, மு)

## பணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நாளை முதல் வாடிக்கையாளர்களுக்கு 2000 ரூபா பணமாக வழங்கப்படும். இந்த நடைமுறையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று இவ்வங்கியின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## கோக்குவிலில் குண்டு வீச்சு; ஒரே குடும்பத்தில் நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் கொக்குவிலில் நேற்று முன்தினம் மேற்கொண்ட விமானத் தாக்குதலால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவத்தில் கோவில், கடை என்பனவும், ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன் தினம் பகல் பதினொரு மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் பொற்பதிப் பிள்ளையார் கோயில் பலத்த சேதமடைந்தது.

கோயிலுக்கு அருகேயுள்ள வீடொன்றின் குளியலறையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குசினிக்குள் அடைக்கலம்தேடிய சிறிலங்கா விமானக் குண்டு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை வீசிய குண்டு வீட்டினுள் புகுந்து சமையல் வேலைசெய்து கொண்டிருந்த குடும்பப்பெண் ஒருவரின் காலடியில் மண்டியிட்டு நின்றது.

நேற்றுக் கந்தர்மடம் மணற்றறை வீதியில் சிறிலங்கா விமானப்படையினர் ஆவேசம் கொண்டு வீசிய விமானக்குண்டொன்று திரு சத்தியசீலன் என்பவரின் வீட்டின் சுவர்களைத் துளைத்துச்சென்று சமையலறையில் நின்ற பெண்மணி ஒருவரின் காலடிவரை உருண்டு சென்று ஓய்வெடுத்துக்கொண்டது. எனினும் குண்டு வெடிக்காததினால் அப்பெண்மணி உயிர் தப்பிக்கொண்டார். (க)

## கும்பறுபிட்டியில் ராணுவம் மீது புலிகள் கிளைமோர் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

கடந்த வியாழனன்று திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கும்புறுப்பிட்டி இராணுவ முகாமில் இருந்து சலப்பையாறு இராணுவ முகாமிற்கு சிறீலங்கா இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் இடைமறித்து கிளைமோர்த் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

## ஆட்சியை மீண்டும் கைப்பற்ற இந்திரா காங்கிரஸ் முயற்சி

(கட்டாக்)

பூரியில் நடைபெறும் ஐக்கிய தேசிய மாநாட்டின் ஏகமனதாக ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு இந்திரா காங்கிரஸ் சமீபகாலத்தில் மேற்கொண்டு வரும் நடவடிக்கை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளைத் தான் எதிர்க்கப்போவதாகவும் ஜனதாதள் கூறியிருக்கிறது.

நாட்டின் உள்ள குழப்பத்தைத் தீர்ப்பதற்கு சீக்கிரமே பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஜனதாதள் கூறியிருக்கிறது.

மண்டல ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஆதரிப்பவரான வி. பி. யின் அரசாங்கத்தின் கொள்கையைச் சந்திரசேகர் அரசாங்கம் சிதைக்கக்கூடாது என்றும் ஜனதாதள் எச்சரித்துள்ளது.

## தச்சன் காட்டுச் சந்தியில் புலிகள் இராணுவம் மோதல்

(நெல்லியடி)

வலி-வடக்கில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் தச்சன்காடு மினிமுகாமிலிருந்து தெற்குப்புறமாக மக்கள் குடியிருப்புகளை நோக்கி வெளியேற முற்பட்டபோது அவர்கள்மீது விடுதலைப்புலிகளின் அணி ஒன்று கடுந்தாக்குதலை மேற்கொண்டது.

சுமார் 30 நிமிடங்கள் வரை நடைபெற்ற உக்கிர மோதலைத் தொடர்ந்து முன்னேற முடியாத இராணுவத்தினர் தமது முயற்சியை கைவிட்டு முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இவர்கள் மீதான தாக்குதல் முகாமிலிருந்து 25 மீற்றர் தூரத்தில் நடைபெற்றது. இதன்போது மாவிட்டபுரம் பலாலி முகாம்களிலிருந்து புலிகளின் நிலைகளை நோக்கித் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்

(4ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா அரசாங்கம்

## ஐ. நா. சபை மனித உரிமைகள் சாசனத்திற்கு ஏற்ப நடப்பதில்லை

யாழ். பிரஜைகள் குழு பிரேமதாசவிற்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் 1955 டிசம்பர் முதல் சிறிலங்கா ஓர் அங்கத்துவ நாடாக இருந்து வருகின்றது. எனினும் சிறிலங்கா அரசாங்கமானது ஐ. நா. வால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் சாசனத்திற்கு அமைய நடக்கத் தவறுவது கவலைக்குரிய செயலாகும் என்று யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

தொற்று வியாதி தடுப்பு மருந்துவகைகளும் மற்றும் முக்கிய மருந்துவகைகளும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கொண்டு வருவதற்குத் தடைபோடப்பட்டுள்ளது. ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர் மருந்தை எதிர்பார்த்து படுக்கையில் இறக்கின்றார்கள். இது போன்று மனித நேயமற்ற செயல் வேறெதுவும் இருக்க முடியாது. இத்துடன், கடந்த 7 மாதங்களாக எரிபொருள் விநியோகம் யாழ்ப்பாணத்தில் நிறுத்திவைக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


**சமூகக்கல்வி**

வெளிவந்துவிட்டது! சமூகக்கல்வி - ஆண்டு: 11. (புதிய பாடத்திட்டம்) ஆசிரியர்: ந. தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (R-1084)

**ஏலவிற்பனை**

கைதடி கயிற்றசிட்டிக் கந்தசுவாமி கோயில் வீதியிலுள்ள பெரிய வாகைமரமும், ஒரு வேப்பமரமும் 91 02 17 ஆம் திகதி காலை 11 00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் முழுப்பணத்தையும் உடன் செலுத்த வேண்டும். தர்மகர்த்தா சபை (B/1985)

**கல்வி**

அரசாங்கப் பாடசாலைகளிலேயோ, தனியார் கல்வி நிலையங்களிலேயோ கணித பாடம் கற்கும்போது ஆரம்ப அறிவின்றி விளங்காது கஷ்டப்படும் மாணவர்களுக்கு ஒரு மாதகால அரம்ப அறிவுப் பயிற்சியளிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.

திரு. ஆறுமுகநாதன், 10, கந்தசாமி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டுக்குளி. (R/1093)

**தவறிவிட்டது**

இரண்டு தங்கப் பவுண் நிறையுள்ள எனது தங்கச் சங்கிலி (பெண்டனுடன்) 08. 02. 1991 ஆம் திகதி காலை ஆரியகுளம் சந்திக் கண்ணமயில் (கோழிக்கடைக்கு முன்பாக) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செல்வி சகுந்தலா சுப்பிரமணியம், யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் விடுதியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R-1095)


## தாலிக்கொடி திருட்டு

(குருநகர்)

13 பவுண் தங்கத் தாலி ஒன்று மர்மமான முறையில் களவாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுளது.

நேற்று முந்தினம் காலை மேசைலாச்சியில் பூட்டிவைக்கப்பட்ட தாலியும் கொடியும் சில நிமிடங்களில் களவாடப்பட்டிருப்பதை அறிந்தவீட்டுக்காரர்கள் விடுதலைப்புலிகளிடம் புகார் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் குருநகர் மவுண்காமல வீதி ஜெரோம் என்பவரது வீட்டில் நடைபெற்றது. (21)

## தவறி வீழ்ந்த பாலகன்

(யாழ்ப்பாணம்)

தென்னைமரத்தின் வட்டுக்குள் இருந்து பட்டம்விட்ட ஐந்து வயதுப் பாலகன் கீழே வீழ்ந்து தனது கையை உடைத்துக்கொண்டுள்ளான்.

பாடசாலை செல்ல மறுத்து வீட்டில் இருந்து பட்டம் விடுவதற்காக முற்றத்தில் நின்ற சிறிய தென்னை மரத்தில் ஏறி பட்டம் விட்டுக்கொண்டிருக்கும் சமயம் தவறுதலாக மேலிருந்து வீழ்ந்து தனது கையை உடைத்துக்கொண்ட அந்தப் பாலகன் செ. உதயரூபன் (வயது 5) பண்டத்தரிப்பைச் சேர்ந்தவராவார். (எ)


# மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

**Milkwhite Liquid Soap**

All Purpose Dirt Remover

துரித சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றுவதில் தனிச் சக்தி வாய்ந்தது.

**சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை**

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

(B. 1993)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரா உயர்திரு.
**மருதப்பு கயிலாசபிள்ளை**
(பழக்கடை இரத்தினம்)

தாயின் மடியில் 19-04-1925 — இறைவனடியில் 11-01-1991

உங்கள் அன்பான புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும் பணிவான நடத்தையாலும் காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பீர்கள் என்று நினைத்தோம். ஆனால் காலன் உங்களை கவர்ந்து விட்டாலும் நீங்கள் விட்டுச் சென்ற அன்பு எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது உங்கள் ஆன்மா சாந்தியடைய நல்லைக் கந்தனை வேண்டுகிறோம்.

பிரமோதூத ஆண்டு மார்கழி மாதம் 27 ஆம் நாள் (11-01-1991) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் பிரமோதூத ஆண்டு தைமாதம் 27 ஆம் நாள் (9 - 2 - 1991) சனிக்கிழமை காலை 7-00 மணியளவில் வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரையில் நடைபெற்று வீட்டுக் கிருத்தியம் இன்று (10-2-1991) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 00 மணியளவில் யாழ். பிறவுண் வீதி இல 2. 2ஆம் ஒழுங்கையில் உள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் இவ் வைபவங்களில் கலந்து கொண்டு. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறவுண் வீதி,
இல 2. 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
அன்னாரின்
மனைவி, மக்கள், மருமக்கள்

(R-1094)

# வீரவேங்கை பழனியின் 91 ஆம் நாள் நினைவஞ்சலி



**பழனி**
**(கனகரட்ணம் கேதீஸ்வரன்)**
மல்லாவி

பிறப்பு திகதி
11. 10. 1970

வீரமரணம்
09. 11. 1990

மண்ணிலே கொடுமைகள்
மலிந்து கிடந்ததும்
மாற்றானின் கரங்கள் எம்
மண்ணில் ஒங்குவதும் கண்டு
மனங் கொதித்து
விடுதலைக் கனவைத் தன்
விழிகளிற் சுமந்து
வீரவேங்கையாய்
எழுந்தவன் பழனி!
சின்ன வயதிலே
சிறுத்தையாய் எழுந்தாலும்
சிரித்த முகத்தோடு எம்முடன்
சேர்ந்து திரிந்தவன்! தன்
நெஞ்சில் உறுதியுடன்
'நிதர்சனம்' தனில் பணிகள் புரிந்தவன்!
தமிழ் மண் காக்கவே
தன் உயிரைத் தந்தவன்!
எல்லோரும்
இன்மைய ய் பழனி...
இடையினில் இளமையை
விட்டுப் பிரிந்தவன்!
விடியலைத் தேடும்
வேங்கைகட்கு...
வேதனை ஒன்றும் புதியதல்ல!
இருப்பக்கு... நாம்
இளைத்துப் போகமாட்டோம்!
இவன் போன்ற வேங்கைகளின்
இலட்சியக் கனவுகளை
இறுதிவரை நனவாக்க...
உறுதியோடு நடப்போம்

(B-1998) நிதர்சனம்



# நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 10

1987 இல் வடமராட்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

2ஆம் லெப். ரவி (மு. தங்கத்துரை வெற்றிலைக்கேணி)

இதே ஆண்டு பூநகரியில் வீரமரணமடைந்த

விசு (ந சித்திரவேல் - பூநகரி)

இதே ஆண்டு ஏற்பட்ட வெடிவிபத்தில் மரணித்த

❋ பிரான்சிஸ் மனோகரன் (பெரியவிளான்)

1989 இல் மன்னார் பேசாலையில் வீரமரணமடைந்த

கப்டன் காண்டீபன் (சி கேதீஸ்வரன் - மன்னார்)

லெப். சௌகன் (மரியதாஸ் குலாஸ்-வங்காலை)

2ஆம் லெப். செபஸ்ரின் (ச. குரைசசற்சருஸ் - மன்னார்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் பிரான்சிஸ் மனோகரன் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டு வீர மரணத்தைத் தழுவியவராவர்

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1989)

### ★ சிந்தனைக்கு ★

ஒரு மனிதன் தனக்கு மேல்நிலையில் உள்ளவர்களிடம், நெருப்புடன் பழகுவது போல் பழக வேண்டும்.
சுட்டுவிடும் அளவுக்கு கிட்ட நெருங்கவும் கூடாது;
குளிரில் வாடும் அளவுக்கு தூர ஒதுங்கவும் கூடாது.

— டயோஜினின்

ஈழநாதம்

11, கேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 10-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# ஆட்டம் காணும் நிலையில் சந்திரசேகர் ஆட்சி

ராஜீவ் காந்தியை மீண்டும் பிரதமராக்கும் முயற்சியை ஆரம்பித்து விட்டதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் தெரிவித்தார். மறுவளமாக் கூறின் சந்திரசேகரின் தேவை முடிந்து விட்டது எனக் கூறலாம். அத்தோடு ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களை விலைக்கு வாங்கும் வேலை ஆரம்பித்து விட்டது எனவும் கூறலாம். இந்திய அரசியலில் பேரம் பேசுதலே முயற்சி என்ற சொல்லின் மூலம் நாகரிகமாகக் குறிப்பிடப்படுவதாகும்.

காங்கிரஸ் கட்சியுடன் தமக்கு விரிசல் ஏற்பட்டுவிட்டது என்பதை இன்றைய பிரதமர் சந்திரசேகரும் ஏற்றுக் கொண்டுள்ளார். காங்கிரஸ் கட்சியுடனான உறவில் சுமுகமான நிலை இருக்கிறது எனக் கூறமுடியாத போதும் உறவில் விரிசல் இல்லை என சந்திரசேகர் இதனை நாசூக்காகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலில் தமக்கான வெற்றி வாய்ப்பைத் தோற்றுவிக்கும் வரையில் சந்திரசேகரை ஆட்சியில் இருக்க அனுமதிப்பது என்ற நோக்கிலேயே ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், தற்பொழுது காங்கிரஸ் தனது நிலையை மாற்றி மாற்றுக் கட்சிகளில் இருந்து கழற்றி எடுத்து அவர்களையும் சேர்த்து ஆட்சி அமைப்பதற்கு முற்படுவது போல் தெரிகின்றது.

இந்நிலையை காங்கிரஸ் கட்சி எடுப்பதற்கு முக்கியமான காரணமாக இருப்பது இந்திரா காங்கிரஸ் கட்சி சந்திரசேகரை ஆட்சியில் அமர்த்தியதின் பின் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவேயாகும். இக்கால கட்டத்தில் இந்திரா காங்கிரஸ் எதிர்க்கட்சியும் இல்லை அரசாங்கக் கட்சியும் இல்லை என்ற நிலையில் எதைப்பற்றியும் தெளிவான குரல் எதுவும் அதற்கு இல்லாமல் போய் விட்டது. இதன் காரணமாக அரசியல் ரீதியான பின்னடைவை காங்கிரஸ் கட்சி சந்திக்க வேண்டி ஏற்பட்டு விட்டது.

ஆனால், இன்னும் இந்திரா காங்கிரஸ் எதிர்பார்த்தது போல் தேர்தலுக்கான சூழ்நிலை உருவாகவில்லை என இந்திரா காங்கிரஸ் கருதுகின்றது. வி. பி. சிங் அரசாங்கத்தைக் கலைப்பதற்கு ஏதுவாக இருந்த மண்டல் கமிசன், ராமஜென்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினைகள் ஓரளவு தணிந்திருந்தாலும், மக்கள் மனத்தில் இருந்து அவ் வடுக்கள் நீங்கவில்லை. அப்பிரச்சினைகளில் நோகடிக்கப்பட்ட முஸ்லிம்களினதும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களினதும் மனங்களை இந்திரா காங்கிரஸ் இன்னும் வெற்றி கொள்ளவில்லை அதேவேளை, ஆந்திராவில் நடந்த இனக் கலவரங்கள் தமிழ் நாட்டு, பாண்டிச்சேரி கோவா மாநில ஆட்சிக் கவிழ்ப்புக்கள் கடந்த தேர்தலின்போது இருந்தது போன்ற ஆதரவை இந்திரா காங்கிரசிற்கு வழங்கும் என்ற நம்பிக்கையும் இந்திராகாங்கிரசாருக்கு இல்லை.

இந்நிலையில், தற்பொழுது கட்சிக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவைத் தடுப்பதற்கு தேர்தல் ஒன்றை நடாத்தாமலே ஆட்சி அமைப்பதே சிறந்ததென இந்திரா காங்கிரஸ் கட்சி எண்ணுகிறது.

ஆனால் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சி அமைப்பதற்கு இன்றுள்ள பலம் போதாது. இந்நிலையில் ஜனதா தளத்தில் இருந்தும், ஜனதாதளம் (எஸ்) இல் இருந்து உறுப்பினர்களைப் பிரித்தெடுப்பதில் இந்திரா காங்கிரஸ் ஆர்வம் காட்டினாலும் கட்சிமாறல் தடைச் சட்டம் அதற்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது.

அதேவேளை தேர்தலை எதிர்நோக்கும் வேலைகளிலும் இந்நிலையில் இறங்கியுள்ளது. பாபர் மசூதி - இராம ஜென்ம பூமி விவகாரத்தில் நொந்து போய் உள்ள முஸ்லிம்களின் மனங்களை வளைகுடா விவகாரத்தைக் கொண்டு மாற்ற நினைக்கின்றார் ராஜீவ் காந்தி. அமெரிக்க விமானங்களுக்கு இந்திய தளங்களில் எண்ணெய் நிரப்பும் விவகாரத்தை அதற்காக பற்றிப் பிடித்துள்ளார். இதன் மூலம் தான் ஏற்படுத்திய இந்திய அமெரிக்க உறவிலான நெருக்கத்தையே பணயமாக வைக்க முற்பட்டுள்ளார் ராஜீவ்காந்தி.

அதேவேளை இந்திரா காங்கிரஸ் இவ்வாறான முயற்சியில் ஈடுபடாது என்று எவரும் சொல்லவுமில்லை. எண்ணவுமில்லை ஆகையால் இவ்விடயத்தில் நிலைமைகளைச் சொல்வதை விட வாதப்பிரதி வாதங்களுக்கு இடமுமில்லை.

# நெருப்பில் விளைந்த பொறிகள்

(ஒலிப்பதிவு நாடா விமர்சனம்)

கடந்த 30 - 12 - 90 அன்று மட்டக்களப்பு பாடும் மீன் கலைமன்றத்தினரால், வெளியிடப்பட்ட 'புதியதோர் புறம்' ஒலிப்பதிவு நாடாவின் அறிமுகவிழா நல்லூர்சாதனா பாடசாலையில் நடைபெற்றது. தமிழீழக் கலைஞர்களின் வளர்ச்சிவேகங்களின் வெளிப்பாடாக வெளிவந்த ''இந்தமண் எங்களின் சொந்தமண்'' ''பூபாளம்'' ''வேங்கைகளின் விடுதலை' வேதங்கள்'' வரிசையில் 'புதியதோர் புறம்' எனும் புதிய வெளியீடான இது மிகவும் தரமானதாகவும், கேட்பதற்கு இனிமையாகவும் எமது மக்களின் விடுதலை வேட்கையையும் போராட்ட உணர்வுகளையும் ஆழமான கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டுகின்றது. பாடு மீன் கலைமன்றத்தின் தலைவரான திரு அமிர்தராஜ் அவர்களின் இந்தப் பணியானது போராட்ட வளர்ச்சிக்கு கலைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன். மக்களை தட்டி எழுப்பும் வகையில் அமைந்திருப்பதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

ஒலிப்பதிவு நாடாவின் ஆரம்பத்தில் வரும் சில வரிகள் ஒலிப்பதிவு நாடாத்தொகுப்பானது இந்த மண்ணின் விடிவிற்காய் வகிக்கும் பங்கினை விபரிக்க அதைத் தொடர்ந்து பாடல்கள் ஆரம்பிக்கின்றன.

முதல் பாடலே, எம்மை பிரமிக்க வைக்கின்றது எங்கோ ஒரு தெய்வ சந்நிதானத்தில் அமைதியான ஒரு சூழலில் ஒலிக்கும் தேவகானம் போன்று அந்தக் குரல் ஒலிக்கின்றது ''எந்தயர் ஆண்டது இந்நாடாகும்! இதை எதிரிகள் ஆள்வது கேடாகும்! வந்து நீ களத்தினில் போராடு, அடிமை வாழ்விலும் சாவது மேலாகும்'' என்று ஆரம்பிக்கும் அந்தப்பாடல், மறைந்த தென் இந்தியப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் தமிழீழ மக்களுக்காக பாடிச் சென்றாரோ என எண்ணத்தோன்றுகின்றது. சுணீரென்ற அவரது தொனியும், இசைஅமைப்பும் உண்மையில் ஒரு தேவகானமேதான், அழகான அந்தக் குரலுக்குரியவர் பாராட்டப்பட வேண்டியவரே அந்தப்பாடலில் விசேட அம்சம் என்னவெனில், தமிழீழத்தின் வளங்களைப் பற்றியும், தமிழீழத்துரோகிகளின் கொடுமைகளையும் சித்தரித்து இறுதியில்

''தாயகம் மீட்டிட நீ ஓடி
- பிரபா
தானையில் சேர்ந்தொரு
புலியாகு
பேயினித் தெருவினில்
விளையாடு - தமிழ்
பூத்திட புதியதோர் புறம்
பாடு''

என்று அழகாக விபரித்திருக்கிறார் கவிஞர். அடுத்த பாடலும், எமது விடுதலைப் போராளிகளான புலிகளின் தன்மையை புலிகளின் மன உறுதியை எடுத்துச் சொல்வதைப் போன்று அமைந்த கவிஞரின் பாடலை ஆண் பெண் குரலிசையால், சோடிப்பாடலாக அழகாகப்பாடி மெருகேற்றியிருக்கின்றார்கள் பாடகர்கள். பெண்குரலின் சங்கீத நயத்துடன் ஆரம்பிக்கும் அப்பாடல்,

''நெருப்பில் விளைந்த பொறிகள் நாங்கள் - நஞ்சைத் தின்னும் புலிகள், இரும்பில் வார்த்த சிலைகள் தலைவன் - இதயம் கவர்ந்த கனவுகள்'' என்று தொடர்கிறது. பெண்குரல் மிகத் தெளிவாகவும், அழகாகவும் ஒலிக்கின்றது.

இதேபோல- இன்றைய காலகட்டத்தில் ஒரு ஸ்திரமற்ற ஒரு வாழ்க்கைப் பயணத்தில் நின்று கொண்டிருக்கும் குழந்தைகளை, ''தம்பிகளே அன்புத் தங்கைகளே நில்லுங்கள், - உங்கள் சரித்திரம் என்ன சொல்லுங்கள்! போர்க்களம் சென்றிட ஒன்றாய் சேருங்கள். புதுயுகம் பல படைப்போம் வாருங்கள்'

என கூவி அழைக்கும் கவிஞரின் பாடலை, அழகான குரலில் இனிமையாக சோகமாக பாடி மக்கள் மனதில் தன்னை பதியவைத்துள்ளார் ஒரு பாடகர் ஆண்குரல் மிக இனிமையாக ரசிக்கக்கூடிய வகையில இருக்கின்றது.

ஒவ்வொரு பாடல்களையும் வித்தியாசமான வகைகளில் இசையமைத் திருக்கும் இசையமைப்பாளர் அந்தப்பாடலை ஒரு துளிசையாக மெருகூட்டியிருக்கின்றார் காலம் சென்ற மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் கொள்கை விளக்க சீர்திருத்தப் பாடல்கள் போல அமைந்த இந்தப் பாடல் மிகவும் பிரமாதம்.

### பாபு

''போடு போடு வீரநடை போடு!- வெல்வோம் வெல்வோம் வீரநடைபோடு. ஆறிலும் சாவு நூறிலும் சாவு மானமிருந்தால் தானே வாழ்வு''

என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடல் கடைசி நிலைகளில் பாடலின் இசையின் சந்தம் மாறி பின்னர் மீண்டும் பழைய ராகத்துடன் சேர்ந்து ''போடு போடு வீர நடை போடு'' என்று நான்குமுறை சுருதியை அதிகரித்துப் பாடி பாடலை முடித்து வைக்கும் போது எமக்குள்ளேயே ஒரு உத்வேகம் பிறக்கின்றது. குதிரை மீது சென்று கொண்டிருப்பது போல கற்பனை பண்ணி இசை அமைத்திருக்கிறார் இசையமைப்பாளர்; நிச்சயமாக இந்தப் பாடல் சிறுவர் - மாணவர் - இளைஞர் யுவதிகள் - முதியவர் என்ற வேறுபாடின்றி ஒவ்வொருவரின் வாயிலும் வெளிவரும் என்பது திண்ணம் இந்தப் பாடகருக்கு பாராட்டுக்கள் பலமுறை வழங்கலாம்.

அதைத் தொடர்ந்து ''மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன் அவன் போன வழியில் பயமென எழுந்து ஓடி வந்தார் புலிவீரர்'' என்று பெண்குரல் ஒன்று சோகமாக ஒலிக்கின்றது குரலில் எந்தவித தளதள புகளும் இன்றி இனிமையாக பாடியிருக்கும் இந்தக் குரல் பாராட்டப்பட வேண்டிய குரல்.

போராட்டத்தின் சிந்தனையின்றி தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவரை தட்டியெழுப்புவது போலவும், வெட்ட வெளியில் காவலரண்களில் நின்று போராடும் புலிகளின் நிலை பற்றியும் விளக்கும் வகையில் ஒலிக்கிறது ஓர் ஆண்குரல். ''தூக்கமேனடா தமிழா தூக்கமேனடா! நிமிர்ந்து நில்லடா நீயும் துணிந்து செல்லடா'' என்று ஆரம்பிக்கின்றது அந்தப் பாடல். உறுதியான குரலில் அழகாகப் பாடியிருக்கிறார் பாடகர். அது போல;

''சிங்களம் எங்களைக் கொன்று குவிக்கும், தமிழர் சிந்திய குருதியில் எம் மண் சிவக்கும்! இங்கிவர் தீமையை தேசம் பொறுக்கும், கொடும் எதிரியை குதறிட புலிகள் கறுக்கும்''

என்று ஒருபாடல் ஆண் குரலில் ஒலிக்கிறது. இப்பாடலில் தென் தமிழ் ஈழத்தின் இன்னல்கள் தெரிகிறது அதற்கேற்ற தொனியில் பாடியிருக்கும் பாடகருக்கு வாழ்த்துக்கள்.

அடுத்ததாக, ஒரு போராளி மாண்டுபோன தனது சக போராளிகளை அழைப்பது போலவும் தாம் ஒன்றாய் கூடித்திரிந்த காலங்களையும், இன்று பிரிந்து நின்று கலங்குவதையும் விரித்து ஒரு பாடல் ஒலிக்கின்றது.

''மாண்டுபோன மைந்தர்களே என்னை சுமந்து நின்ற நண்பர்களே மீண்டும் இங்கே கூடுங்கள் ஈழம் மீட்போம் இங்கே வருங்கள்.'' என்று ஆரம்பிக்கும் இப்பாடலும் இனிமையாக இருக்கின்றது.

ஒரு வித்தியாசமான வகையில் அமைந்ததும் எமது போராளிகளை காத்து வந்த காடுகளை வரம் வேண்டிப் பாடுகின்றது ஒரு மழலைக் குரல்.

''காடுகளே காடுகளே கொஞ்சம் கேளுங்கள் தமிழ் ஈழத்தின் வீரர்களை என்றும் காத்தே வாருங்கள்'' என்று மழலையின் செல்லக் குரல் ஒன்று ஒலிக்கின்றது. இந்தக் குரல் மிக விரைவாக வளர்ச்சியடையக் கூடிய வேகம் தெரிகிறது. இந்தக் குரலுக்கு ஒரு பாராட்டும் வாழ்த்தும் உரித்தாகட்டும்.

''சத்தியத்தை காப்பதற்கு ராமன் வனவாசம் சென்றான்! இலட்சியத்தைக் காப்பதற்கு தலைவன் உமை நாடி வந்தான்! தாய்போல காத்து எங்கள் வீரர்களை ஆளாக்கி நீங்காத நினைவாக நெஞ்சமதில் வீற்றிருவீர்''

என்ற கவிஞரின் கோரிக்கையும் பாடலுக்குரிய மழலைக் குரலும் அற்புதமாக இருக்கின்றது.

இறுதியாக, ''வீட்டுக்கொரு மைந்தனே விரைந்து வா, அடிமை விலங்கை உடைத்தெறிய போராடுவோம்'' என்று ஆரம்பிக்கின்றது ஒரு ஆண்குரல் மிக உறுதியாக போராட்டத்திற்கு அணிதிரட்டும் நோக்கம் கொண்ட இப்பாடலில்,

''நம்பிநேசம் போனதினால் வந்தவினை! சொந்த மண்ணில் வாழ்வதற்கே அஞ்சும் நிலை! கண்ணைக் கட்டி காட்டினிலே விட்டதுயர்! மண்ணை மீட்கப் போராடும் எங்கள் கதை'' என்ற வரிகள் எமது பரிதாபத்தை வெளிப்படுத்துகின்றன. பாடலுக்குரியவர் அழகாக, ஆழமான உணர்வுடன் பாடியுள்ளார். இவருக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

மொத்தத்தில், 'புதியதோர் புறம்' கொண்ட முத்தான பத்துப் பாடல்களும் மிக நன்றாக அமைந்திருக்கின்றன. இசையமைப்பு பிரமாதம் அடுத்த வெளியீடுகள் இதைவிட சிறந்த இசையில் வெளிவர வாழ்த்துகிறேன் ஒலிப்பதிவு நன்றாக இருக்கின்றது. மொத்தத்தில் கலைஞர்களின் வளர்ச்சியும் ''போடுபோடு வீர்நடைபோடு'' என்று கூறுமளவிற்கு அமைந்திருக்கின்றது.

இப்படியொரு தரமான ஒலிப்பதிவு நாடாத் தொகுப்பை வெளியிட்ட பாடும்மீன் கலைமன்றத்தினருக்கும் அதன் தலைவர் திரு. அமிர்தராஜ் அவர்களுக்கும் தமிழ்மக்கள் சார்பில் நன்றிகள்.

